ஸ்ரீ ஐயப்பன்

சரித்திரமும் படங்களும்

ரிஷி பரசுராமரால் மகரசங்கராந்தியன்று சபரிமலையில் பிரதிஷ்டை
செய்யப்பட்ட பகவான் ஸ்ரீ ஐயப்பன் திருவுருவம்.

அச்சன் கோவில்:

கிரகஸ்த நிலையில் ஐயப்பன் குடி கொண்ட கோவில்.

ஆரியங்காவு கோவில்:

குமார சொரூபத்தில் ஐயப்பன் குடி கொண்ட கோவில்.

குளத்துப்புழா:

இது பால பருவத்தில் பகவான் குடி கொண்ட கோவில்.

பந்தளம்:

ராஜசேகரராஜாவின் குடும்பக் கோவில். இங்கிருந்து தான் திருவாபரணம் சபரிமலைக்குச் கொண்டு வருகின்றனர்.



எரிமேலி வாவர் கோவிலும் பேட்டை சாஸ்தா கோவிலும்.

வாவர் கோவில்: இந்து முஸ்லீம் ஒற்றுமைக் காட்டுகின்ற வகையில் எருமேலியிலுள்ள வாவர் கோவிலில் பக்தர்கள் வழி பட்டு பிரசாதம் பெறுங்காட்சி. இரு சமூகத்தினரும் ஒன்றாக வழிபடுகின்றனர். இங்கு விபூதிதான் பிரசாதமாகக் கொடுக்கப்படுகின்றது.



பேட்டை துள்ளல்: பேட்ட துள்ளாமல் எந்த ஐயப்ப பக்தனும் கோட்டைப்படி கடந்து பூங்கா வனத்தினுள் செல்லுதல் கூடாது என்பது மரபு. செல்வந்தன் ஏழை என்ற பேதமின்றி முகத்தில் கரி பூசி காட்டுவாசி வேடம் கொண்டு பேட்ட துள்ளும் காட்சி.

எரிமேலிக் கோவில்:
மன்னன் ராஜசேகரன் தன் பரிவாரங்களுடன் சபரி மலைக்குச் சென்ற போது தன் படைகளுடன் தங்கி பகவான் நினைவாக ஒரு கோவில் எழுப்பிய இடம். இங்கிருந்துதான் பெரும்பாதை வழியாக சபரிமலை செல்லும் பக்தர்கள் தங்கள் பயணத்தைத் துவக்குகிறார்கள்.





பம்பை: உற்சவம் முடிந்தபின் ஜனசந்தடியற்ற பம்பா நதிக் கரை. இங்கு காட்டுயானைகள் கூட்டம் கூட்டமாக சர்வ சாதாரணமாக வந்து போகும். யானைகள் பம்பாநதிக்கரையில் நிற்கின்ற காட்சிகள்.



பம்பை: சாலக்காயம் வழியாக சபரிமலைவரும் பக்தர்கள் பம்பா நதிக்கரை வரையில் வாகனங்களில் வர நல்ல சாலை அமைக்கப்பட்டுள்ளது. நதியைக் கடக்க முன்பு மரப்பாலம் மட்டுமே இருந்தது சமீபத்தில் நல்ல கான்க்ரீட் பாலங்கள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளது.

பம்பை: பம்பா விநாயகர், அனுமன், சக்தி கோவில்களுக்குச் செல்கின்ற படி. இது பம்பை யாற்றின் மறுகரையில் உள்ளது.



நீலிமலை: கரிமலைபோல செங்குத்தான கடிய மலைதான் இது. படத்தில் காண்பது போல் மரக் குச்சியால் கட்டப்பட்ட படியாகும் இது. மழை நாளில் வழுக்காமல் இருப்பதற்கு ஏதுவாகக் கட்டப்பட்டது.



பண்டைய திருவிதாங்கூரில் பந்தளநாடு என்பதுவும் ஒன்றாகும். இந்த பந்தள நாட்டைப் பாண்டிய வம்சத்தில் தோன்றிய இராஜசேகர பாண்டியன் என்பவன் ஆண்டு வந்தான். இவன் வீரதீர பராக்கிரமத்தில் மிகவும் வல்லவன். முறையாக நாடாண்ட இவனது ஆட்சியில் மக்கள் எவ்வித குறைபாடுமின்றி வாழ்ந்து வந்தனர். அழகிய இராணியும், அன்பான குடிமக்களும், ஆண்டனுபவிக்கப் பெருஞ்செல்வமும் இருந்த போதிலும், தனக்குப் பின் நாட்டை ஆள ஒரு வாரிசு இல்லையே என்ற பெருங்குறை அந்த மன்னனுக்கு இருந்தது. பந்தள நாட்டுக் குடிமக்களும், அன்பேவடிவான தம் மன்னனுக்கு பிள்ளைச் செல்வம் இல்லையே என்று பெரிதும் வருந்தினர். சிவ பக்தனான மன்னன் இராஜ சேகரனும், இராணியும் தங்களுக்கு வாரிசு வேண்டி சிவ பெருமானை தினமும் வழிபட்டு வந்தனர். மன்னன் மீது மாறாத அன்பு கொண்ட மக்களும் மன்னனுக்கு வாரிசு வேண்டி சிவபெருமானை வழிபட்டு வந்தனர்.

அரம்பன் என்ற அரக்கனுடைய மகன் மகிஷாசுரன் என்பவன் பிரம்மாவை நோக்கி நீண்ட காலமாகக் கடும்தவம் புரிந்து வந்தான். அவனுடைய கடும் தவத்தைக் கலைக்கப் பெரிதும் முயன்றும் முடியாமல் போகவே, இறுதியில் பிரம்மா அவன் முன் தோன்றி "பக்தனே! உன் தவபலத்தை மெச்சினேன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ அதைக் கேட்பாயாக" என்றார். மகிஷாசுரனும் மகிழ்ச்சியடைந்து "அய்யனே! இந்த பூமியில் பிறந்த யாரும் என்னைக் கொல்லாதிருக்கும் வரம் வேண்டும்" என்று கேட்டான். பிரம்மாவும் அரக்கன் கேட்ட வரத்தை அளித்து விட்டு மறைந்தார். மகிஷன் தான் பெற்ற வரத்தைத் தவறாகப் பயன்படுத்தி பூலோகத்திலும், தேவலோகத்திலும் பெரும் கொடுமைகள் புரிந்து வந்தான். மக்களும் தேவர்களும் அரக்கனுடைய துன்பத்திற்கு ஆளாயினர்.

மகிஷாசுரனின் கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் எல்லோரும் ஒன்று கூடி மும்மூர்த்திகளாகிய சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகியோரிடம் சென்று தங்களைக் காத்தருளும்படி வேண்டினர். ஆனால் மும்மூர்த்திகளும் தாங்கள் தனியாக அரக்கனுடன் போரிட்டு வெல்வது இயலாது எனக் கருதினர். இருப்பினும் தேவர்களும், மானிடர்களும் படும் தொல்லைகளைக்கண்டு மனமிரங்கி மூவரும் தம் தம் சக்திகளை எல்லாம் ஒன்று கூட்டி சண்டிகா தேவி என்னும் சக்தியைப் படைத்து மகிஷாசுரனை அழிக்கும்படி ஏவினர். சண்டிகாதேவியும் அரக்கன் முன்தோன்றி அவனுடன் கடும் போர் புரிந்து அவனை அழித்தொழித்தாள். தேவர்களும் மானிடர்களும் துன்பம் நீங்கி மகிழ்ச்சி அடைந்தனர்.



அரம்பனின் சகோதரனாகிய கரம்பனுடைய புத்திரி மகிஷி தன்னுடைய அண்ணன் மகிஷாசுரனுக்கு ஏற்பட்ட அழிவை எண்ணிப் பெரிதும் வருந்தினாள். அதற்குக் காரணமான தேவர்களைப் பழிவாங்க முடிவு செய்தாள். அதற்கான சக்தியைப் பெறும் பொருட்டு மகிஷி பிரம்மாவை நோக்கிக் கடும்தவம் புரிந்தாள். இவளுடைய தவ வலிமையை மெச்சிய பிரம்மா இவள் முன் தோன்றி, "பெண்ணே! உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்!" என்று கேட்டார். மகிஷி "அய்யனே, எனக்கு சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பிறந்த புத்திரனால் அல்லாது வேறு எவராலும் சாவு நேரக்கூடாது" என வேண்டினாள். பிரம்மாவும் அவள் கேட்ட வரத்தைக் கொடுத்து மறைந்தார். வரம் பெற்ற மகிஷி தேவலோகம் சென்று தேவர்களுக்குப் பல கொடுமைகள் புரியத் தொடங்கினாள்.

துர்வாசருடைய சாபத்தால் தேவர்களுக்கு நரை ஏற்பட்டது. பாற்கடலைக் கடைந்
தெடுத்த அமுதம் ஒன்றினால்தான் நரைசாபத்தைப் போக்க முடியும் என்ற
மகாவிஷ்ணுவின் யோசனையின் பேரில் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக்
கடைந்தார்கள். அதில் தோன்றிய அமுதத்தை அசுரர்கள் பறித்துக் கொண்டார்கள்.
அதை மீட்க மகாவிஷ்ணு மோகினி வடிவில் சென்று அமுதத்தை அசுரர்களிடமிருந்து
மீட்டு தேவர்களிடம் கொடுத்தார். இதை அறிந்த பரமசிவன் மோகினி வடிவைக் காண
மகாவிஷ்ணுவை அணுகினார். மோகினியின் அழகிய வடிவு கண்டு மனம் மயங்கினார்.
அதன் விளைவாக ஓர் ஆண் குழந்தை உருவாயிற்று. அந்த குழந்தையை புத்திரப்
பேறில்லாத தன்னுடைய பக்தனான இராஜசேகர மன்னனிடம் ஒப்படைக்க பூமிக்கு
கொண்டு செல்லுமுன், பரமசிவன் அக்குழந்தைக்கு ஒரு மணிமாலையை அணிவித்தார்.
மகா விஷ்ணு

மன்னன் இராஜசேகரன் பரிவாரங்களோடு பம்பாநதி தீரத்துக்கு வேட்டையாடச் சென்றான். அங்கு ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டு அப்பக்கம் சென்று பார்த்தான். குழந்தையைக் கண்டு அதிசயித்து என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த போது, ஒரு முனிவர் அங்கு தோன்றி அரசனிடம் "மன்னவா! நீ குழம்ப வேண்டாம். இவன் உன்னுடைய பிள்ளையில்லாக்குறையைப் போக்கவே அவதரித்திருக்கிறான். இவனை எடுத்துச் சென்று வளர்ப்பாயாக. கழுத்தில் மணிமாலை இருப்பதால் இவனுக்கு மணிகண்டன் என்று பெயரிட்டு வளர்த்து வா. பனிரெண்டு வயதில் இவன் யார் என்று நீ அறிந்து கொள்வாய்" என்று சொல்லி மறைந்தார்.

கண்ணில்லாதவன் பார்வை பெற்றது போல, பிள்ளையில்லாத குறையினால் வருந்திய பந்தள மன்னனும் பெரும் மகிழ்ச்சியடைந்து அக்குழந்தையைத் தன் அரண்மனைக்கு எடுத்துச் சென்றான். குழந்தையை ராணியிடம் கொடுத்து நடந்ததை எல்லாம் கூறினான். குழந்தையைக் கண்ட ராணியும் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தாள். பந்தள நாட்டு மக்களும் மன்னனுக்குப் பிறகு நாட்டையாள வாரிசு கிடைத்தது பற்றி மகிழ்ந்தனர். ஆனால் வாரிசற்ற மன்னனுக்குப்பின் தானே மன்னனாகலாம் என்று மனக்கோட்டை கட்டி வந்த பந்தள நாட்டு திவான் மட்டும் வருத்தப்பட்டான்.



மணிகண்டன் சிறந்த ஒரு குருவின் கீழ் வித்தைகளை திறமையுடன் கற்று வந்தான். அவனது அசாதாரணமான திறமையைக் கண்ட குரு இவன் சாதாரண சிறுவனல்ல, தெய்வாம்சம் பொருந்தியவன் என்று புரிந்து கொண்டார். வித்தை முடிந்து மணி கண்டன் குருதட்சணை கொடுக்கக் குருவை அணுகிய போது, அவர் 'எனக்கு குருதட்சணை வேண்டாம். குருடும் ஊமையுமான என் மகனுக்கு பார்வையும் பேச்சும் அளிக்க வேண்டும்' என்று கேட்டார். மணிகண்டன் குருவின் மகனை ஆசிர்வதித்து கண் பார்வையும் வாய்ப்பேச்சும் கொடுத்து, அதை யாரிடமும் கூற வேண்டாம் என்று சொல்லி குருவை வணங்கி, அரண்மனைக்கு வந்தான்.

இதற்கிடையில் ராணிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. மன்னன் மணி கண்டனுக்கு முடிசூட்ட தீர்மானித்தான். இதை அறிந்த திவான், விஷம் கொடுத்து மணிகண்டனைக் கொல்ல நினைத்தான். ஆனால் அது முடியாத நிலையில் ராணியை அணுகி "உன் சொந்த மகனிருக்க மணிகண்டனுக்கு முடி சூட்டல் நல்லதல்ல. எனவே நான் சொல்வது போல் கேட்பாயானால் உன் மகனுக்கு முடிசூட்ட முடியும்" என்று சொல்லி சதித் திட்டம் தீட்டினான். மனம் மாறிய இராணியும் 'என் மகன் முடி சூட்டிக் கொள்ள நான் எதுவும் செய்யத் தயார்' என்று சொன்னாள்.

திவானின் திட்டப்படி ராணி தலைவலியால் அவதிப்படுவதாக நடித்தாள். திவானால் அனுப்பப்பட்ட மருத்துவர் "புலிப்பால் ஒன்றினால்தான் இந்நோய் குணமாகும்" என்று சொன்னார். மனிதன் புலிப்பால் கொண்டுவருவது அசாத்தியம் என்று அறிந்த மன்னன் தன் ராணியின் நலம் பொருட்டு புலிப்பால் கொண்டு வருபவருக்கு தன்ராஜ்யத்தில் பாதியைக் கொடுப்பதாக பறையறிவித்தான். காட்டுக்குச் சென்று திரும்பியவர்கள் "புலியைக் கண்டோம், ஆனால் புலிப்பால் கிட்டவில்லை" என்று கூறினர்.

துக்கத்துடன் இருந்த மன்னனிடம் மணிகண்டன் "நான் இருக்கும் போது நீங்கள் கவலைப்பட வேண்டாம்; நான் போய் புலிப்பால் கொண்டு வருகிறேன்" என்றான். அதற்கு மன்னன் "நீ சிறியவன்; வேண்டாம்" என்று சொன்னான். மணிகண்டனோ "என் தாயின் நலம் காக்க நான் அவசியம் போயாக வேண்டும். என்னைப் போய் வர அனுமதியுங்கள்" என்றான். மணிகண்டனின் நிர்பந்தத்தின் பேரில் மனதில்லா மனதோடு மன்னன் மணிகண்டனைக் காட்டுக்குச் செல்ல அனுமதித்தான்.

புலிப்பாலுக்காக காட்டுக்குப் புறப்பட்ட மணிகண்டனுக்கு பரமசிவனால் அனுப்பப்பட்ட பஞ்ச பூதங்கள் துணையாக இருந்தன. நரையால் பாதிக்கப்பட்ட தேவர்கள் அமுதம் உண்டு குணமானது கண்டு ஆத்திரமடைந்த மகிஷி, சொர்க்கம் சென்று தேவர்களுக்குத் தொல்லை கொடுக்கலானாள். அதை அறிந்த மணிகண்டன் அங்கு சென்று மகிஷியை தூக்கி பூமியில் எறிய, மகிஷி அமுதயாற்றின் கரையில் வந்து விழுந்தாள். அங்கு இருவருக்கும் கடும் போர் நடந்தது அதில் மகிஷி மணிகண்டனால் கொல்லப்பட்டாள். தன்னுடைய அவதார நோக்கத்தினை நிறை வேற்றிக் கொண்ட மணிகண்டன் புலிப்பால் பெறும் பொருட்டு புலிகளைத் தேடி அலைந்தான்.

மகிஷியைக் கொன்ற நன்றிக்கடனுக்காக இந்திராதி தேவர்கள் மணிகண்டனை வணங்கினர். சிவபெருமான் அவன் முன் தோன்றி, அவனுக்கு வாழ்த்துக் கூறி இந்திரன் ஆண் புலியாகவும் தேவர்கள் பெண் புலிகளாகவும் வடிவெடுப்பார்கள் என்றும் மணிகண்டன் புலி மீது அமர்ந்து மாளிகைக்குச் செல்லலாம் என்று சொன்னார். பெண் புலிகள் புடை சூழ, ஆண் புலி மீது மணிகண்டன் வருவதைப் பார்த்த மக்கள், வியப்பும் அச்சமும் கொண்டு நடுங்கி இங்கு மங்கும் ஓடினர்.

ஸ்ரீ பால சுபிக்ஷம் இராமசுப்ரமணியன்

புலிமீதமர்ந்து மணிகண்டன் வருவதை தூரத்திலிருந்து பார்த்து அதிசயித்த அரசன் 'இவன் சாதாரண மனிதனல்ல. பனிரெண்டு வயது முடிகிறநாள் இன்று தான். இன்று அவன் யார் என்று தெரியும்' என்று நினைத்து மாளிகை முற்றத்திற்கு வந்தான். மணிகண்டன் தன் தந்தையைப் பார்த்ததும் புலிமீதிருந்து இறங்கி "தந்தையே நான் புலிகளைக் கொண்டு வந்திருக்கிறேன். உடனடியாக பாலைக்கறந்து தாயின் நோய் தீர்த்து புலிகளை அனுப்புங்கள்" என்றான். மன்னன் மணிகண்டன் காலில் விழுந்து வணங்கி "பகவானே! இனி என்னை சோதிக்க வேண்டாம். புலிகளை அனுப்பி விடுங்கள். நீங்கள் காட்டுக்கு சென்றபின்தான் இங்கு நடந்த சதித்திட்டம் எனக்குத் தெரிந்தது. நான் தவறு செய்திருந்தால் என்னை மன்னிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

மணிகண்டனும் "மன்னிப்பதற்கு எதுவுமில்லை. எல்லாம் என் இச்சைப்படியே நடந்துள்ளன. நான் பூமியில் எதற்காகப் பிறந்தேனோ, அந்த வேலை முடிந்துவிட்டது. இனி நான் தேவலோகம் செல்கிறேன்" என்றான். மன்னன், "பகவானே! தாங்கள் எங்களுடன் இருந்ததன் நினைவாக உங்களுக்கு ஒரு கோயில் கட்ட நினைக்கிறோம். அதை எங்கு கட்ட வேண்டும் என்று சொல்லுங்கள்" என்றான். அதற்கு மணிகண்டன் ஒரு அம்பை எடுத்து எய்து "இந்த அம்பு எங்கு போய் விழுகிறதோ அங்கு கோயில் எழுப்புங்கள்" என்றான். அந்த அம்பு சபரிமலையில் போய் விழுந்தது. அங்கு பதினெட்டு படிகளுடன், கிழக்கே நோக்கி தனக்கும், பக்கத்தில் மாளிகைப் புறத்தம்மனுக்கும் கோவில் கட்டும்படி கூறிவிட்டு மணிகண்டன் தேவலோகம் சென்றான்.

ஸ்ரீ பால சுபிக்ஷம் இராமசுப்ரமணியன்

மணிகண்டன் கட்டளைப்படி, அகத்திய முனிவரின் ஆலோசனையுடன் இராஜ சேகரப் பாண்டியன் ஊண், உறக்கமின்றி தானே மேற்பார்வை செய்து சபரிமலையில் பதினெட்டுப் படியோடு கூடிய அழகிய கோயிலைக் கட்டினான். ஆண்டுதோறும் லட்சோப லட்சம் மக்கள் ஜாதி மத பேதமற்று, மாலை அணிந்து 41 நாட்கள் கடும் விரதம் அனுசரித்து, ஐயனின் பூஜைக்குரிய நெய் நிரப்பிய தேங்காய், பூஜைப் பொருள்கள் அடங்கிய ஒரு முடியும், நடந்து செல்லும் போது வழியில் தேவைப்படும் உணவுப் பொருள்கள் அடங்கிய மற்றொரு முடியுமான இருமுடிக்கட்டுடன் ஐயப்பன் நாமம் சொல்லி பம்பை நீராடி சபரிமலை அடைந்து புனித பதினெட்டுப்படி ஏறி ஐயப்பன் அருள் பெற்று வருகிறார்கள். ஆண்டு தோறும் மகர சங்கராந்தி தினத்தன்று ஐயப்பன் பக்தர் களுக்கு ஜோதி உருவில் காட்சியளித்து ஆசி அளிக்கிறார்.



ஆராட்டு: பகவான் ஐயப்பன் பம்பையில் நீராடப் போகும் காட்சி. ஐயப்பன் திருவுருவத்தை யானை மீது ஏற்றி வாத்தியங்கள் சூழப் பம்பைக்குக் கொண்டு செல்கின்றனர். பக்தர்களுடன் தேவஸ்தான ஐயப்பன்களும், போலீஸ் ஐயப்பன்களும் உடன் செல்கின்றனர்.

ஆராட்டு:
பம்பையாற்றில் ஐயப்பன் திரு உருவத்தை நீராட்டும் காட்சி.

சரங்குத்தி: கன்னி ஐயப்பபக்தர்கள் தங்களுடன் எடுத்து வரும் அம்பைச் செருகும் இடம். எந்த ஒரு வருடம் கன்னிஐயப்பன்மார் தன்னைத் தரிசிக்க சபரிமலைக்கு வரவில்லையோ, அந்த வருடம் பகவான் ஐயப்பன் மாளிகைப் புறத்தம்மனை திருமணம் செய்து கொள்வதாக சொன்னதாக ஐதீகம். வருடம் தோறும் லட்சக்கணக்கில் கன்னி ஐயப்பன்மார் சபரிமலை யாத்திரை வருவதால், மாளிகைப் புறத்தம்மனும் கன்னியாகவே காத்திருக்கிறார்.

சபரிபீடம்: ஸ்ரீ ராமர் அவதார காலத்தில் சபரி என்ற சன்னியாசினி தவமிருந்தாள். ஐயப்பன் அவதார காலத்தில்தான் சபரிக்கு மோட்சம் கிட்டியது. இந்தப் பகுதிதான் சபரி பீடம். இங்கு பக்தர்கள் சூடம் காட்டி, தேங்காய் எறிந்து வழிபடுகின்றனர்.







புனிதமும்,
சத்திய
சாந்தமுமான
பதினெட்டு
படிகள் பல
ஆண்டுகளுக்கு
முன்பு
கருங்கல்
கொண்டு
கட்டப்பட்டது
தற்போது
படிகள்
பஞ்சலோகத்
தினால் மூடப்
பட்டு அழகுற
அமைக்கப்
பட்டுள்ளது.



திருமுற்றம்: புனித பதினெட்டுபடிகள் ஏறியவுடன் பக்தர்கள் பகவானின் திருமுற்றத்தை அடைகின்றனர். இங்கு பக்தர்கள் சயனப் பிரதட்சணம் செய்து உடல் நலத்தையும் பகவான் அருளையும் பெறுகின்றனர்.

கொடிமரம்! பதினெட்டுப்படி ஏறியவுடன் பகவான் சன்னதியின் எதிரில் கொடிமரம் உள்ளது.



ஓர் அதிசயம்! பந்தளத்திலிருந்து திருவாபரணத்தைக்கொண்டுவரும்போது அதனுடன் ஆகாயத்தில் ஒரு கருடன் வட்டமிட்ட வண்ணம் உடன் வரும். பின் கோவிலை மூன்று முறை வலம் வந்து மறைந்து விடும்



மாளிகைபுரத்து அம்மையும் கடுத்த சாமியும் இங்கு குடிகொண்டுள்ளனர். இங்கு பிரதான வழிபாடு தேங்காய் உருட்டுவதும் வெடி வெடித்தலுமாகும்.

பந்தளத்திலுள்ள ராஜ வம்ச அரண்மனையிலிருந்து திருவாபரணத்தைத் தலையிலேந்தி பக்தர் சூழ சன்னிதானத்திற்குக் கொண்டு வருகின்றனர். மகர சங்கராந்தியன்று பகவானுக்கு இந்த ஆபரணங்கள் சூட்டி அலங்கரிக்கப்படுகின்றது.



மகர ஜோதி நாள் அன்று மாலை ஜோதி தெரிவதற்கு சற்று முன், அம்மலை முகட்டில், முன்பு எப்போதும் தோன்றாத நட்சத்திரம் ஒன்று தோன்றும்.



ஸ்ரீ தர்ம சாஸ்தா குடி கொண்டுள்ள அம்பல மேட்டிலிருந்து மகரவிளக்கன்று பகவான் ஜோதி உருவில் லட்சோப லட்சம் பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார்.

PRICE Rs. 15.00

Printed and Publised by :
Srinivas Fine Arts Ltd, Sivakasi


ஸ்ரீ பா ல சு பி க் ஷ ம் இராமசுப்ரமணியன்
Srinivas, Sivakasi